



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. சந்தரமோகன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர் மரு. எம். ஆர்த்தி, தாய்பே வர்த்தக மற்றும் கலாச்சார மையத்தின் தலைமை இயக்குநர் ஸ்டீபன் எஸ்.சி. ஷு, மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன், பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் - மடிக் கணினிகள் : முதல்வர் வழங்கினார்!

# "தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025 - பள்ளிக் கல்வி"!

## முதல்வர் மு. க.ஸ்டாலின் வெளியிட்டு வாழ்த்திச் சிறப்புரையாற்றினார் !

**சென்னை, ஆக. 10 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025 பள்ளிக்கல்வி"யை வெளியிட்டார். மேலும், முதன்மை உயர் கல்வி நிறுவனங் களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார்.**

**"தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025 - பள்ளிக் கல்வி"**

செயற்கை நுண்ணறிவிலிருந்து காலநிலை அறிவியல் வரை பள்ளிக் கல்விக் கொள்கை 2025, எதிர்காலத்திற்கு ஆதாரமாக உள்ள கல்வியாகும். பள்ளிக்கல்வி செயல்பாடுகளில் ரோபோடிக்ஸ், தரவு அறிவு மற்றும் நிதித் திட்டமிடுதல் ஆகியவற்றை இணைக்கும் போது மாணவர்களுக்கு எதிர்கால வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களைப் பெறுவதுடன் இன்றைய சவால்களையும் எதிர்கொள்ள இயலும். பல்வேறு பாடங்களை ஒருங்கிணைத்துக் கற்றல், கூர்ச் சிந்தனை, புதியன புனைதல், மின்னணு அறிவு போன்றவற்றை மேம்படுத்துகின்றன.

இப்புதிய பள்ளிக்கல்வி கொள்கையானது, எதிர்காலத்திற்கு தேவையான திறன்களைக் கொண்ட கற்போர்களை வளர்த்தல், தமிழ்நாட்டின் புதிய கலைத் திட்டம் மனப்பாடம் என்ற முறையிலிருந்து விடுபட்டு கற்பதில் ஆர்வம், படைப்பாற்றல் மற்றும் பண்பாட்டுப் பெருமை ஆகியவற்றால் மாற்றியமைத்து, மாணவர்களை வினாக்கள் கேட்கவும், கண்டறியவும், புதுமையாக சிந்திக்கவும் ஊக்குவிப்பதோடு, பாடங்கள் தமிழ்நாட்டின் வளமான இலக்கிய மரபு, சமூக இயக்கங்கள் போன்றவற்றை சிறப்பிக்கும் வகையில் அமைத்தல், TN SPARK செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் ஆகிய எதிர்காலத்திற்குத் தேவையான திறன்களை வளர்க்கும் கல்வியைக் கற்பித்து இளம் மனங்களை வளரும்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசுப் பள்ளி மாணவர்கள் அதிகளவில் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு சேர்க்கை பெற்று சாதனை புரிந்திட உதவிய தலைமையாசிரியர்களுக்கு நினைவுப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

தொழில்நுட்பத்துடன் தூண்டச் செய்தல், கலைக் கல்வி பராம்பரிய முறையிலான தெருக்கூத்து மற்றும் கரகாட்டம் ஆகிவற்றைக் கொண்டு பண்பாடு மற்றும் படைப்பாற்றல் குறித்த வகுப்பறைக்கு அப்பாற்பட்ட கல்வி, உடற்கல்வியானது பாடம் சாரா செயல்பாடாக அமையாமல் அடிப்படையானதாக அமைத்தல்;

அபரிதமான தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் வளர்ந்து வரும் சிக்கலான அமைப்பு முறை ஆகியவற்றை கொண்டுள்ள மாறிவரும் உலகத்திற்கான வாழ்வியல் திறன்கள், மத்திய இடைநிலைப்பள்ளி வாரியம், இந்திய இடைநிலைக்கல்வி குழுமம் மற்றும் பன்னாட்டுப் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் மொழி கற்பதை உறுதி செய்தல், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் சரளத்தன்மையை ஏற்படுத்துதல், மூன்றாம் வகுப்பிற் குள் ஒவ்வொரு குழந்தையும் புரிதலுடன் வாசித்தல் மற்றும் அடிப்படை கணிதச் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல், ஒவ்வொரு கல்வி வட்டத்திலும், உத்தம வளங்கள், பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைத் தூண்டும் தொலைநோக்குடன் செயல்படும் முன்னோடி பள்ளிகளை உருவாக்குதல், மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் திறனும் விருப்பமுள்ள ஆனால் பின் தங்கிய பின்னணியிலிருந்து வரும் மாணவர்களுக்கான வாய்ப்பு மையங்களாக உருவாக்குதல்;

கல்வி தொலைக்காட்சி மூலமாக மாணவர்களுக்கு தரமான கற்பித்தல் நிகழ்ச்சிகளையும் மணற்கேணி செயலி மூலமாக வினாடி-வினா, அனிமேஷன்கள் மற்றும் விளக்க வீடியோக்கள் வழியாக மாணவர்களுக்கு தனிப்பயன் கற்றலுக்கான வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்விரண்டையும் இணைத்து ஒருங்கிணைந்த டிஜிட்டல் கல்வி சூழலை உருவாக்கி, "ஒவ்வொரு வீடும் ஒரு வகுப்பறை" எனும் கொள்கை நோக்கத்தை நடைமுறைப்படுத்துதல், அனைவரும் நுழையக் கூடிய வசதியான வளாகங்கள் (accessible infrastructure), அனைத்து வகை மாணவர்களும் இணைந்து கற்கும் வகுப்பறைகள் (inclusive classrooms), ஆதரவான தொழில்நுட்பங்கள் (assistive technologies), கல்விச் சமத்துவத்தை மதிப்பீடு செய்யும் பங்குத் தணிக்கைகள் (Equity Audits) போன்ற முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

மதிப்பெண்களிலிருந்து திறன்மிக்க கற்றலுக்கு பயணித்திடும் வகையில் திறனடிப்படையிலான வளர்ச்சி சார்ந்த மதிப்பீடுகளை முன்னிறுத்திடும் வகையில் திட்டங்கள் (projects), வாய்மொழி தேர்வுகள் (oral tests), சகமாணவர்களின் கருத்தளிக்கைகள் (peer feed back), மாணவர் வளர்ச்சி கோவைகள் (port folios) போன்ற பல்வேறு முறைகள் மூலம் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், பள்ளிகளை வெறும் கல்விக் கட்டிடங்களாக மட்டும் அல்லாமல், பசுமைசார்ந்த ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் மாணவர் நட்பு சூழலுடன் கூடிய கற்றல் வளங்களாக மாற்றுதல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தொழில் மட்டுமின்றி வாழ்க்கைக்கு வழிகாட்டிடும் வகையில் 9ஆம் வகுப்பிலிருந்தே, அனைத்து மாணவர்களுக்கும் தொழில் வழிகாட்டல், ஆர்வங்கள், திறன்கள் மற்றும் வாய்ப்புகளைத் தேடும் பயணங்களை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை வலியுறுத்திடும் வகையிலும், தமிழும் - ஆங்கிலமும் என்கின்ற இருமொழிக் கொள்கையை அடிப்படையாக கொண்டு தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

**முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்**

நடப்பு கல்வியாண்டில் 50 விதமான துறைகளில், 93 முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 901 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் மடிக்கணினி மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். மேலும், அரசுப் பள்ளி மாணவர்கள் அதிகளவில் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு சேர்க்கை பெற்று சாதனை புரிந்திட உதவிய தலைமையாசிரியர்களுக்கு நினைவுப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்.

2022 முதல் கடந்த மூன்று ஆண்டுகளில், அரசுப் பள்ளிகளிலிருந்து முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 977 ஆகும்.

பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற படிப்புகளை கடந்து கட்டடக் கலை, விவசாயத் தொழில்நுட்பம், வடிவமைப்பு, தடய அறிவியல், அறிவியல் ஆய்வு நிறுவனங்கள், கடல் சார் பல்கலைக்கழகங்கள், வான்வழி போக்குவரத்து, பெட்ரோலிய தொழில்நுட்பம் ஆகிய அறிவியல் சார் துறைகளில் மட்டுமின்றி, அரசுப் பள்ளிகளில் போதிய கவனமற்றிருந்த வணிகவியல், பொருளியல், மானுடவியல் துறைகளிலும் நாட்டின் தலை சிறந்த நிறுவனங்களான இந்திய சுற்றுலா மற்றும் பயண நிர்வாகப் பல்கலைக்கழகம், தில்லிப் பல்கலைக்கழகம், கொல்கத்தாவின் செயின்ட் சேவியர் கல்லூரி, அசிம் பிரேம்ஜி பல்கலைக் கழகம் போன்றவற்றிலும் பெரும் எண்ணிக்கையில் நம் மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு கல்வியாண்டில் 50 விதமான துறைகளில், 93 முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் 901 அரசுப் பள்ளி மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர். அதிலும் குறிப்பாக 150 மாற்றுத்திறன் மாணவர்கள் இந்த ஆண்டு மட்டும் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் இடம் பெற்றுள்ளனர். மேலும், ஐஐடிகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒற்றை இலக்கத்தில் சேர்க்கை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை நடப்பு கல்வியாண்டில் 27 மாணவர்களாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு அரசுப் பள்ளிகளில் பயிலும் பெற்றோரை இழந்த மாணவர்கள், மாற்றுத்திறன் மாணவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் ஆகியோருக்கு சிறப்பு பயிற்சிகளும் உயர்கல்விக்கான வழிகாட்டலும் வழங்கப்பட்டன. இதன் விளைவாக தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகளிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர்களில் உயர்கல்வி சேர்ந்தவர்களின் விழுக்காடு 75ஆக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு இது மேலும் அதிகரிக்கும்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. சந்தர மோகன், பி., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர் மரு. எம். ஆர்த்தி, தாய்பே வர்த்தக மற்றும் கலாச்சார மையத்தின் தலைமை இயக்குநர் ஸ்டீபன் எஸ்.சி.ஷு, மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன், பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## மகாராஷ்டிரா போல எல்லா மாநிலங்களும் விழிப்புணர்வு பெறும்போது

# ஒன்றிய அரசே மும்மொழிக் கொள்கையைக் கைவிட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாகும்!

## தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை வெளியீட்டு விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஆக.10-**

**சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையை நிலைநாட்டுகிற வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை'யை நேற்று முன்தினம் வெளியிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர், ``இருமொழிக் கொள்கை உட்பட தமிழ்நாட்டின் பார்வையோடு உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை, நம் மாணவர்களின் கல்வியை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்லும்" என்றும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் வருமாறு:

நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிடுகின்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து பங்கெடுப்பதை, எனது வாழ்நாளில் பெருமையான ஒன்றாகக் கருதுகிறேன்.

**கல்வித் திருவிழா**

மாநில கல்வி முறையில், அரசு பள்ளியில் படித்து ஐ.ஐ.டி. தொடங்கி பல முதன்மை உயர்கல்வி நிறுவனங்கள் வரை சேர்ந்துள்ள மாணவர்களை இங்கே பாராட்டிக்கொண்டு இருக்கிறோம். இது சாதாரண நிகழ்ச்சி கிடையாது. நம் முதலமைச்சர் தலைமையில், நடைபெறுகின்ற தமிழ்நாட்டின் `கல்வித் திருவிழா' என்று சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால், `அறிவுத் திருவிழா' என்று சொன்னால் அது மிகமிக பொருத்தமாக இருக்கும்.

இந்தியாவிலேயே இன்றைக்கு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை எண்ணற்ற சாதனைகளைப் படைத்துக்கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொருத்தவரைக்கும் இன்றைக்கு நேற்று அல்ல, சங்க காலம் முதலே தமிழர்கள் கல்வியில் சிறந்து விளங்கிகொண்டுதான் வந்தார்கள். ஆனால், இடையில் ஏற்பட்ட சில வரலாற்றுச் சூழ்ச்சிகளால் தமிழ் மக்களின் கல்வியில் தடை ஏற்பட்டது. தடைபட்டது என்றால், அது எதுவோ தானாக ஏற்பட்ட தடை அல்ல. கல்வி உரிமை நமக்கு தடுக்கப்பட்டது.

**முன்னேறி இருக்கிறது**

தடுக்கப்பட்ட அந்த கல்வி உரிமையை, மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக உருவான இயக்கம்தான் திராவிட இயக்கம். அப்படிப் போராடி பெற்ற கல்வியை, எப்படியாவது பறித்துவிடலாம் என்று அப்போது முதல் இப்போது வரை தொடர்ந்து சூழ்ச்சிகளை, பலர் செய்துகொண்டு வருகிறார்கள். இட ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பு, குலக் கல்வி திட்டம், மும்மொழிக் கொள்கை, புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு என பல வழிகளின் நம் கல்வி உரிமையைச் சிதைக்க முயற்சிகள் நடந்துகொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு கால கட்டத்திலும் அந்தத் தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்துதான் நம் தமிழ்நாடு இந்த நிலைமைக்கு முன்னேறி இருக்கிறது.

குலக்கல்வித் திட்டம் என்று ஒன்று வந்தது. மாணவர்கள் பாதி நேரம் படிக்க வேண்டும், பாதி நேரம் குலத்தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம். அந்தக் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினார். அதனால்தான் குலக்கல்வித் திட்டம் தமிழ்நாட்டில் இருந்து ஒழிந்தது. இப்போது புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூக மாணவர்களை கல்வியிலிருந்து வெளியேற்றுகின்ற அந்த திட்டத்தை இன்றைக்கு ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது.

**வாழும் பெரியார்**

தமிழ்நாட்டில் புதிய கல்விக்கொள்கையை செயல்படுத்த மாட்டோம் என்று இன்னொரு வாழும் பெரியாராக போர் முரசு கொட்டியவர்தான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். உங்களின் கல்விக்கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ்நாட்டிற்கு என்று தனியாக நாங்கள் ஒரு கல்விக்கொள்கையை இயற்றிக் கொள்கிறோம் என்று தைரியமாக, துணிச்சலாக சொன்னவர் தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

இதோ இன்றைக்கு, இந்த மேடையில் தமிழ்நாட்டின் புதியக் கல்விக் கொள்கை இங்கே வெளியிடப்பட்டு இருக்கிறது. சமீபத்தில் இதே அரங்கத்தில் நம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதிய `தேசிய கல்விக் கொள்கை எனும் மதயானை' என்ற நூலை நம் முதலமைச்சர் அவர்கள் தான் வெளியிட்டார்கள். அந்த நிகழ்ச்சியில் நம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு மதம் பிடித்த யானையை அடக்குவதற்கான அடையாளமாக ஒரு அங்குசத்தை நினைவுப் பரிசாக கொடுத்தார். அந்த அங்குசம் வெறும் அடையாளம் மட்டும்தான்.

**மாநிலக் கல்விக்கொள்கை**

இன்று வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு கல்விக்கொள்கை என்பதுதான் உண்மையான அங்குசம். மதம் பிடித்து, தமிழ்நாட்டின் கல்வியை ஒடுக்க நினைக்கும் யானையை அடக்குவதற்கான அங்குசம் தான் இந்த மாநிலக் கல்விக்கொள்கை. புதிய தேசியக் கல்விக்கொள்கையின்படி மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் சொன்னார். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான், தமிழ்நாட்டிற்கு வழங்கப்படக்கூடிய 2 ஆயிரத்து 600 கோடியைத் தருவோம் என்று வெளிப்படையாகவே மிரட்டினார்கள். ``2 ஆயிரம் கோடி இல்லை, நீங்கள் 10 ஆயிரம் கோடி கொடுத்தாலும், தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாது" என்று தைரியமாக சொன்ன ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்.

எந்தவொரு மொழியாக இருந்தாலும், அதைக் கட்டாயப்படுத்தி திணிப்பதை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதுதான் தமிழ்நாட்டு மண்ணின் வரலாறு. நம் முதலமைச்சர் அவர்கள் இங்கு தொடங்கிவைத்த மொழி உரிமைப் போர் மகாராஷ்டிரா வரை பரவியது. அங்கு நடந்த மிகப்பெரிய போராட்டத்தால் அந்த மாநில மக்கள் அரசு மும்மொழிக் கொள்கையைத் திரும்ப பெற்றது. இப்படி எல்லா மாநிலங்களும் விழிப்பு உணர்வு பெறும்போது ஒன்றிய அரசே மும்மொழிக் கொள்கையைக் கைவிட வேண்டிய கட்டாய சூழ்நிலை கண்டிப்பாக உருவாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கல்வி என்பது மாநில பட்டியலில்தான் இருந்தது. பிறகு அதனை ஒத்திசைவுப் பட்டியலில் சேர்த்தார்கள். இதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டின் கல்வி உரிமையின் மீது பல முனைகளில் இருந்து இன்று தாக்குதல் நடந்துகொண்டு இருக்கிறது. எங்களுக்கான கல்வியை, நாங்களே முடிவு செய்து கொள்கிறோம் என்ற மாநில உரிமையை நிலைநாட்ட, கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டும்.

**பாராட்டு விழா**

இதற்கான தொடக்கமாகத்தான் தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கையை நான் பார்க்கிறேன். அதேபோல் அரசு பள்ளியில் படித்து ஐ.ஐ.டி. போன்ற முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு இங்கு பாராட்டு விழாவும் நடந்துகொண்டுள்ளது.

நண்பர் மகேஷ் அவர்களுடன் பேசும் போது, இந்த மாணவர்களைப் பற்றி சொல்லுங்கள் என்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார். குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டம், கரிக்கலாம்பாடி கிராமத்தைச் சேர்ந்த தம்பி சந்துரு, தந்தையை இழந்தவர். பாட்டியின் அரவணைப்பில் அரசு பள்ளியில் படித்து ஜே.ஈ தேர்ச்சி பெற்று இன்றைக்கு உத்தரகாண்டில் உள்ள ஐ.ஐ.டியில் சேர்ந்துள்ளார். அவருக்கு நமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

கிருஷ்ணகிரி மாவட்டம், வண்ணந்தூரைச் சேர்ந்த ஜெயஸ்ரீ, சவரத் தொழிலாளியின் மகள் அரசு பள்ளியில் படித்து, இன்றைக்கு தைவானில் உயர்கல்வி படிக்க சேர்ந்து இருக்கிறார். அவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி சகோதரி கீர்த்திகா சி.எல்.ஏ.டி நுழைவுத்தேர்வில் வெற்றிப்பெற்று திருச்சியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைகழகத்தில் இன்று படித்துக்கொண்டு இருக்கிறார். அவருக்கும் வாழ்த்துகள். இவர்களைப் போல இன்று வந்துள்ள நூற்றுக்கும் அதிகமான அரசு பள்ளி மாணவர்கள், தமிழ்நாடு அரசின் துணையுடன் பல முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து இருக்கிறார்கள். இவர்கள் அடுத்தடுத்து வர இருக்கின்ற மாணவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக நீங்கள் அத்தனை பேரும் திகழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நாங்கள் சொல்ல விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நீங்கள் படிப்பில் கவனம் செலுத்துங்கள், அதே நேரத்தில் விளையாட்டிலும் தாராளமாக ஈடுபடுங்கள். உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்து, பார்த்து செய்வார். கல்விக்கு ஏற்படும் எல்லா தடைகளையும் நம் முதலமைச்சர் அவர்கள் தகர்த்தெறிவார். இங்கு வந்துள்ள அரசு பள்ளி மாணவர்கள் உங்களின் எதிர்காலம் சிறக்க எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் தமிழ்நாடு மாநிலக் கல்விக்கொள்கை எனும் மகத்தான ஆவணத்தைத் தயாரித்துள்ள அந்தக் குழுவுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.